# கும்பகர்ணனின் தனி மனிதன் மதிப்புகள்

**முனைவர் சு. தீபா**
**உதவிப் பேராசிரியர், தமிழ்த் துறை, (சுயநிதிப் பிரிவு)**
**அக்சிலியம் கல்லூரி (தன்னாட்சி), காந்தி நகர்,**
**காட்பாடி, வேலூர் – 632006.**
**மின்னஞ்சல் – deepa.thiru7819@gmail.com**

7

**ஆய்வு நோக்கம்**

எந்தக் குழந்தையும் நல்ல குழந்தை தான் மண்ணில் பிறக்கையிலே என்பார்கள். அவர்கள் வாழும் சூழலும், வளரும் வகைமையும் தான் அவர்களது குணங்களை உறுதிப்படுத்துகின்றன. தமிழிலக்கியங்களில் அப்படியான மாந்தர்களை சங்க காலம் தொடங்கி இக்காலம் வரையிலான படைப்புகளில் அடையாளப்படுத்த முடியும். இடைக்காலத்தில் தோன்றிய கம்பராமாயணத்திலும் வெவ்வேறு குணங்களைக் கொண்ட கதை மாந்தர்களை கம்பர் வடித்திருப்பார். அவரது படைப்பில் தேவரும், நரகரும், மானிடரும் இடம்பெற்றிருக்கக் காணலாம். கம்பராமாயாணத்தில் விலங்கினமும், பறவைகளும் கூட பேசும். ஆனால் ஒவ்வொரு கதை மாந்தருக்கும் ஒவ்வொரு குணம் உண்டு. அரக்கரே ஆனாலும் அவர்களிடம் நிலவும் தனிமனித ஒழுக்கங்களை மிக நேர்த்தியாக அவர் பகர்ந்திருக்கக் காணலாம். அந்த வகையில் குணம் நாடி குற்றமும் நாடி அவற்றுள் மிகை நாடி கும்பகர்ணனிடம் நிலவும் தனிமனித மதிப்புகளை நவில்வதே இக்கட்டுரையின் நோக்கமாக்கும்.

**ஆய்வுச் சுருக்கம்**

அமுதெனத் திகழும் தமிழில் கமலமென உலவும் படைப்புகள் ஏராளம். கணக்கிலா தமிழறிஞர் தந்துச் சென்ற வனப்புமிகு படைப்புகளை ஆய்ந்து மகிழ்ந்த தமிழ்ப் பெரியோரான திருமிகு செல்வ கேசவ முதலியார் அவர்கள், “அமிழ்தினும் இனிய தமிழ் மொழிக்கு கதியாவார் இருவர்; அவர்கள் கம்பரும் திருவள்ளுவரும் ஆவர்” என்றார். மகாகவி பாரதியாரோ, “யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல் வள்ளுவன் போல் இளங்கோவைப் போல் பூமிதனில் யாங்கணுமே கண்டதில்லை” என்கிறார். இப்படி, கம்பனையும் வள்ளுவனையும் பாடாத கவிஞர்களே இல்லை. குறிப்பாக, கம்பர்

இயற்றிய இராமாவதாரத்தை பயிலாதவரும் இல்லை; மேற்கோள் தராதவரும் இல்லை. அத்தகைய சிறப்புமிக்க கம்ப ராமாயணத்தில் உலாவரும் கதாபாத்திரங்கள் ஒவ்வொன்றும் தன்னிகரற்றவை. இந்நூலில் உலாவரும் ஒவ்வொரு கதைமாந்தருக்கும் ஒவ்வொரு விதமான குண நலன் உண்டு. தேவரோ, மனிதரோ, நரகரோ, விலகினமோ யாராயினும் அவருக்கென்று விதிக்கப்பட்ட குணங்களை உயர்வாக்கி வடித்திருப்பது கம்பரின் தனித்தன்மை. அந்த வகையில் கும்பகர்ணனின் குணநலன்களை உருவாக்கி இருப்பது அருந் தன்மை. அத்தகைய மதிப்புகளை இக்கட்டுரை முன்வைக்கிறது.

**திறவுச்சொற்கள்:** கும்பகர்ணன் அன்பாளன் - சிறந்த கொள்கையன் - உயர்ந்த நெஞ்சினன் - பேராளன் - ஈடிலா உடன்பிறப்பாளன்.

**முன்னுரை**

காவிய உலகில் உன்னத படைப்பாகத் திகழ்வது கம்பராமாயணம். இந்நூலில் கம்பரால் வழங்கப்பெற்ற கதாபாத்திரங்களில் மிக உன்னதமான படைப்பு கும்பகர்ணன். மிகச்சிறந்த பண்பு, பொருள் பொதிந்த அக்கறை, இணையில்லா அன்பு என கும்பகர்ணனுக்கு மிகச் சிறப்பாக வடிவம் கொடுத்திருக்க காணலாம். குன்றன்ன தோளினான், அறம் சார்ந்த நெஞ்சினான், செஞ்சோற்று கடனுக்காய் விரும்பி உயிர் துறந்தான், உயர்ந்த பண்பினான், கொண்டது விடாத கொள்கையான், அறநெறியை அண்ணனுக்கு வலிந்துரைக்கும் வகையினான், மன உறுதி குன்றாதான் என கம்பரால் மிக நேர்த்தியாக அடையாளப்படுத்தப்பட்டவன் கும்பகர்ணன். அத்தகைய வீரச்சிறப்புகள் நிறைந்த கும்பகர்ணனின் தனி மனித மதிப்புகளே இக்கட்டுரையில் எடுத்துரைக்கப்படுகிறது.

**இலக்கியங்களும் தனிமனித மதிப்புகளும்**

சமூக கட்டமைப்பில், மனிதர்கள் தம்மை நிலைநிறுத்திக்கொள்ளக் கையாளும் உத்திகளில், அவர்கள் தமக்குத் தாமே அமைத்துக் கொண்ட ஒழுக்க நெறிகளே காரணிகளாக அமைகின்றன. சங்க காலம் முதல் தற்காலம் வரை இயற்றப்பட்டு வரும் இலக்கிய படைப்புகளில், தனி மனிதனை அடையாளப்படுத்தும் மதிப்புகள் ஏராளமாக எடுத்தாளப்பட்டு வருகின்றன. இலக்கியத்திற்கும் சமுதாயத்திற்கும் இடையே உள்ள இணைப்பினை வே.தி. செல்லம் அவர்கள், “மக்களின் வாழ்க்கையை எழுதுவதே இலக்கியம். இலக்கியம் சமுதாயத்தின் கண்ணாடி போன்றது. இலக்கியப் போக்கினை சமுதாயத்தின் அகப்புறத் தாக்கங்கள் வழி நடத்துகின்றன”[1] என்று தமது இலக்கிய

வரலாற்றில் குறிப்பிடுகிறார். அந்த வகைமைதனை கம்பரும் தமது இராமாயணத்தில், தான் உருவாக்கிய கதாபாத்திரங்களில் மிளிரச் செய்திருப்பதை நன்கு காண முடிகிறது.

**கும்பகர்ணனும் தனி மனித மதிப்புகளும்**

மனிதர்கள், பிறர் போற்றும்படியான வாழ்க்கையை வாழ்வதற்கே பெரும்பாலும் விரும்பவர். தான் வாழும் போதும், தன் வாழ்க்கைக்குப் பிறகும் தனக்கென வகுத்து வாழ்ந்த நன்மதிப்புகள் பிறரால் பேசப்படும் என்றும் பகிரப்படும் என்றும் நம்புகின்றனர். இத்தகைய நன்மதிப்புகளை ஆவணப்படுத்தும்போது அவை சிறந்த படைப்புகளாக உருவாகிவிடுகின்றன அப்படித்தான் கம்பரும் தமது இராமாயணத்தில் நன் மதிப்புகள் பலவற்றை தாம் வடித்த கதாபாத்திரங்களின் வழி உலவ விட்டிருப்பதைக் காண முடிகிறது.

பொதுவாக மனிதச் சமூகத்தில் தான் பிறந்த குலத்தின் சிறப்பு, வீரம், அறம், கல்வி, அறிவு, புகழ், நிலையாமை, மானம், செல்வம், தெய்வம், விருந்தோம்பல், கண்ணீர், புன்னகை, சுயமதிப்பீடு, பிறர் மதிப்பிற்கான செயல்பாடு, பிறர் நலம் பேணல், நீதிக்காய் குரல் கொடுத்தல் என தன்னை உயர்த்தும் மதிப்புகளை கடைபிடிப்போரும் உண்டு. தன்னலம், சுய மரியாதை இன்மை, அறம் அல்லாத நடவடிக்கைகள், பொய், களவு, காமம், குரோதம், லோபம், மதம், மாச்சரியம், இயலாமை, முயலாமை என்பன போன்ற தடுமாறச் செய்யும் மதிப்புகளும் உண்டு. கம்பரும் தமது படைப்பில் கும்பகர்ணனை பற்றி குறிப்பிடுகையில் அரக்கனே ஆயினும் உயர் குணங்கள் பல நிரம்பியவன் என உயர்த்தி பேசியிருப்பார். கும்பகர்ணனின் தோற்றப் பொலிவினை,

> “சூலம் ஏகந் திருந்திய தோளினான்
> சூல மேகம் எனப்பொலி தோற்றத்தான்
> காலன் மேல் நிமிர் மத்தன்; கழற் பொரு
> காலன் மேல் நிமிர் செம்மயிர்க் கற்றையான்” [2] (பா.எ.65)

என்று குறிப்பிடுகின்றார்.

மலை போன்று பருத்த தோளினான்; உம்பரும் அஞ்சும்படியான பொலிவினான்; உறக்கத்தில் படுத்திருக்கும் போதும் அலை கடலை நினைக்க வைத்திடுவான்; கும்பகர்ணனின் கண்களோ சூரியனும் சந்திரனும் ஒளிந்து கொள்ளும் படியான குகை போன்றிருக்கும்; அவன் விடும் மூச்சு பெரும் புயலைப் போன்றது என்றெல்லாம்

கும்பகர்ணனை பற்றி சிலாகிக்கும் கம்பர் உறங்கி எழுந்தவனின் தோற்றப்பொலிவை,

“விண்ணினை இடறும் மோலி, விசும்பினை நிறைக்கும் மேனி
கண்ணெனும் அவைஇ ரண்டும் கடல்களிற் பெரியவாகும்
எண்ணினும் பெரிய னான இலங்கையர் வேந்தன் பின்னோன்
மண்ணினை அளந்து நின்ற மாலென வளர்ந்து நின்றான்”[3] (பா.எ.57)

என்று விதந்து கூறுகின்றார். கும்பகர்ணன் உறக்கத்தில் இருந்தாலும், கண் விழித்திருந்தாலும் கம்பரது வரிகளில் அவன் பராக்கிரமனாகவே உலவுகிறான். தனது அண்ணன் இராவணனை வணங்கும் அன்பாளனாகவும் திகழ்கிறான்.

**அண்ணனை வணங்கும் அன்பாளன்!**

- நெடிது நாட்களாய் உறக்கத்திலிருந்த கும்பகர்ணன் கண் விழித்த பின்பு, அண்ணனை காண வருகின்றான். அவனது பாதம் தொழுதுகின்றான். இதனை கம்பர்,

  - “நிலைகி டந்த நெடு மதில் கோபுரத்து
  அலைகி டந்த இலங்கையர் அண்ணலைத்
  தொலைகி டந்த வேல் கும்ப கருணனோர்
  மலைகி டந்தது போல வணங்கினான்”[4] (பா.எ.71)

என்று குறிப்பிடுகிறார் ஆராயும் திறமற்ற இராவணனின் தம்பி கும்பகர்ணன் தனது அண்ணனின் குணம் தெரிந்தவனே ஆயினும் மூத்தவனை வணங்கும் முறையறிந்து மலை போன்ற தனது உடலைப் பணியாக்கி பணிந்ததிலிருந்து அவனது அன்பை அறிய முடிகிறது. அவனது கொள்கை குன்று போலானது என்பதனையும் அறிந்து கொள்ள முடிகிறது.

**குன்றன்ன கொள்கையான்!**

கம்பர், கும்பகர்ணனின் உருவச் சிறப்பை குறிப்பிடுகையில் குன்றன்ன கொள் கையான் என்கிறார். ஆனால் இதே சொல்லாடல் குன்று போல் உயர்ந்த கொள்கையை உடையவன் எனவும் பொருள் தருகிறது. இராவணன் சீதையை சிறை எடுத்தது தவறு என்பதை இராவணனிடம் துணிந்து சொன்னதாலும் இனிமேல் மீண்டும் மீண்டும் போய் கூறப்போவதாலும் கும்பகர்ணன் குன்றன்ன கொள்கையான் என சிறப்பிக்கப்படுவதாக கூறப்படுகிறது.[5] இதனை,

“வாயில் வல்லை நுழைந்து மதிதொடும்

கோயில் எய்தினன் குன்றன கொள்கையான்".[6] (பா.எ.70)

என்னும் வரிகளால் அறிய முடிகிறது. கும்பகர்ணன், இராவணனைக் காணச் செல்லும்போது, சொல்லக்கூடிய வரிகளாக இவை அறியப்படுகின்றன. கும்பகர்ணன் அரக்கர் குலத்தினனாகவே இருந்தாலும் இதுதான் அறம் என்று தன் அண்ணனுக்கு எடுத்துரைக்கும் இடத்தில் அறம் உணர்ந்த நெஞ்சினனாக அறியப்படுகின்றான்.

**அறம் உணர்ந்த நெஞ்சினான்!**

இராவணன் கும்பகர்ணனிடம், "மானிடர் இருவர் வானரப் பெருஞ் சேனை யுடனே நமது நகர்ப்புறத்தை முற்றுகையிட்டுள்ளனர் இதுவரை நாம் பெறாத வெற்றியை உன்னால் பெற விரும்புகிறேன் ஆகையால் நீ விரைந்து போருக்கு செல்வாயாக!" என்று குறிப்பிடுகையில்,

"ஆனதோ வெஞ்சமர் அலகில் கற்புடைச்
சானகி துயர் இனம் தவிர்ந்தது இல்லையோ?
வானமும் வையமும் வளர்ந்த வான் புகழ்
போனதோ? புகுந்ததோ பொன்னும் காலமே"[7] (பா.எ.79)

என கும்பகர்ணன் போருக்காக வருந்தியதாக கம்பர் குறிப்பிடுகிறார். கற்புடை சானகியின் துயர் இன்னமும் தீரவில்லையோ வானமும் வையமும் வருந்தும் அளவிற்கு புகழ்வாய்வு சிதையும் அளவிற்கு அறம் அல்லாத போர் மூண்டதோ என வருந்துகிறான் கும்பகர்ணன். போர் செய்யச் சொன்னது சகோதரனே ஆனாலும் அறம் அன்று என்று வலியுறுத்தும் அளவிற்கு அறமுணர்ந்த நெஞ்சினனாக அவன் விளங்கியமையை அறிய முடிகிறது.

"திட்டியின் விடம் அன்ன கற்பின் செவ்வியை வீட்டிலையோ?"[8] (பா.எ.80)

என்று குறிப்பிடுகையிலும், "நிலத்தின் இயல்பால் நீரின் இயல்பு திரிவதைப் போல உன்னுடைய செயலால் வெற்றி காண்பது இல்லவே இல்லை" என்று குறிப்பிடுகையிலும் கும்பகர்ணனின் அறம் உணர்ந்த நெஞ்சினை அறிய முடிகிறது. அறம் பேசும் கும்பகர்ணன் அன்பிலும் சிறந்தவனாக திகழ்கிறான்.

**தங்கைக்கோர் அன்பாளன்!**

போர்க்களத்தில் இலக்குவனோடு போர் புரிந்து கொண்டிருக்கும் போது,

"பெய்த வத்தினோர் பெண் கொடி எம்முடன் பிறந்தாள்

செய்த குற்றமொன் றில்லவள், நாசி வெஞ் சினத்தால்
கொய்த கொற்றவ மற்றவள் கூந்தல் தொட்டு ஈர்த்த
கைத்த லத்திடைக் கிடத்துவன் காக்குதி என்றான்" [9] (பா.எ.235)

என்று குறிப்பிடுகையில் அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ் எனும்படி எண்ணத் தோன்றுகிறது. தங்கையின் திறமறிந்தும், சூர்ப்பனகை குற்றம் ஒன்று இல்லவள் என குறிப்பிடுவதிலிருந்து அவன் தங்கை மேல் கொண்டிருக்கும் அன்பை அறிய முடிகிறது. அதே சமயத்தில் கண்டாலே கோபம் கொள்ளும் பகைவருக்கும் கூட அன்பு செலுத்தும் பேராளன் கும்பகர்ணன் என்பதையும் அறிந்து கொள்ள முடிகிறது.

**பகைவரைப் புகழும் பேராளன்!**

கும்பகர்ணன் அரக்கர் குளத்தில் பிறந்திருந்தாலும் மிக உயரிய குணத்தினன் ஆகவே கம்பராமாயணத்தில் வலம் வருகிறான் இலக்குவனுக்கும் கும்பகர்ணனுக்கும் போர் முழுகிறது இலக்குவன் அம்புகளை தொடுக்கிறான் அரக்கர் சேனை உயிர் பயம் கொண்டவராய் சிதறி ஓடுவதை கண்ட கும்பகர்ணன்,

"செருவில் மாண்டவர் பெருமையும் இலக்குவன் செய்த
வரிவில் ஆண்மையும், நோக்கிய புலத்தியான் மருமான்,
திரிபு ரம்செற்ற தேவனும், இவனுமே செருவின்
ஒருவி லாளர் என்று, ஆயிரம் காலெ டுத்து உரைத்தான்" [10] (பா.எ.228)

என்று குறிப்பிடுவதாகக் கம்பர் கூறுகிறார். திரிபுரத்தை அழித்த சிவபெருமானும் இவ் விலக்குவனுமே போரில் நிகரற்ற வில்லாளர்கள் என்று குறிப்பிடுகையில் கும்பகர்ணன் பகைவரையும் புகழும் பேராளன் என்பதை அறிந்து கொள்ள முடிகிறது அதே சமயத்தில் தனது அண்ணனுக்காகவும், தங்கைக்காகவும் எதையும் செய்யத் துணிந்தவன் என்பதையும், அறத்தின் வழி நின்ற வீடணனுக்கு கருணை காட்டியவன் என்பதையும் கம்பராமாயணத்தில் அறிந்து கொள்ள முடிகிறது.

**ஈடிலா உடன்பிறப்பாளன்!**

மூவுலகையும் வெல்லும் வகைமை கொண்ட இராவணன், மாற்றான் மனைவிக்காய் போர் செய்ய துணிந்தான் என்பதனை அறிந்த கும்பகர்ணன், தன் அண்ணனுக்கு அறிவுரை பகர்ந்தான். உன்னுடைய செயல் அறம் அன்று என்று எடுத்துரைத்தான். இவை எல்லாம் கும்பகர்ணனின் ஈடில்லா அரவணைப்பை காட்டுவதாக இருக்கிறது. தனது உடன்பிறப்பின் மீது தான் கொண்ட அக்கறையை,

"பணையொன்று திரள்தோள் கால பாசத்தால் பிணிப்பக் கூசி

துணையின்றி சேரல் நன்றோ தோற்றுள கூற்றின் சூழல்?"[11] (பா.எ.159)

என்று குறிப்பிடுவதில் இருந்து அறிய முடிகிறது தம்பியர் இருக்கும்போது நீ தனியாக சுழல்வது நன்றாக ஆகுமோ என்று கேட்பதில் இருந்தும் அறிந்து கொள்ள முடிகிறது. மேலும் வீடணனிடம் தனது அன்பைப் பகிர் கையில்,

"என்றவன் தன்னை மீட்டும் எடுத்து, மார்பு இறுக புல்லி

நின்று நின்று இரங்கி ஏங்கி, நிறை கணால் நெடிது நோக்கி

இன்றொடும் தவிர்ந்தது அன்றே, உடன்பிறப்பு என்று விட்டான்;

வென்றி வெந்திறலி னானும், அவனடித் தலத்து வீழ்ந்தான்"[12] (பா.எ.167)

என்று கூறுவதாகக் கம்பர் குறிப்பிடுகிறார். கும்பகர்ணன் தன் தம்பியாகிய வீடணனைத் தழுவி கூறும் வரிகளும், இராவணனிடம் பணிந்து கூறும் வரிகளும் அவனை ஈடிலா உடன்பிறப்பாளன் என வலியுறுத்துவதை அறிய முடிகிறது. இப்படி கும்பகர்ணன் நல்ல நண்பனாக, பண்பனாக, சிறந்த உடன்பிறப்பாக, பராக்கிரமனாக, கடமை உணர்ந்தோனாக... பல பாடல்களில் தனிமனித மதிப்பு மிக்கவனாக உலா வருவதை அறிய முடிகிறது.

**வீரமரணம் வேண்டினோன்!**

இராமனின் அம்புகள் கும்பகர்ணனை தாக்கின. மிகவும் வேதனை அடைந்தவனாய், "என்னை யாரும் இகழாதிக்க என் கழுத்தை அறுத்திடுவாய்! அறுத்த பின் கரிய கடலில் அழுத்திடுவாய்! இதுவும் எனது வேண்டுகோளாகும்" என்கிறான் கும்பகர்ணன். இதனை,

"மூக்கிலா முகமென்று முனிவர்களும் அமரர்களும் நோக்குவார்

நோக்காமை நுண்கணையால் என் கழுத்தை

நீக்குவாய் நீக்கியபின் நெடுந்தலையை கருங் கடலும்

போக்குவாய் இது நின்னை வேண்டுகின்ற பொருள் என்றான்"[13] (பா. எ. 360)

என்ற வரிகளால் அறிய முடிகிறது. கைகளை கால்களை இழந்து முக்கிலா முகம் என விழுந்து கிடக்க விரும்பாத கும்பகர்ணன் தன் தலையைக் கொண்டு கடலில் வீசிட வேண்டுமென இராமனிடம் வேண்டுவதிலிருந்து மதிப்பு குன்றிய மரணத்தை அவன்

கொஞ்சமும் விரும்பவில்லை என்பது நன்கு புலனாகிறது. கும்பகர்ணனது வாழ்வு கம்பரது வரிகளில் தியாக வாழ்வென அறிய முடிகிறது.

**நிறைவுரை**

கம்பரின் பாத்திரப்படைப்புகளில் தனிச்சிறப்புடன் விளங்குபவர் கும்பகர்ணன். கும்பகர்ணன், வீர தீர பராக்கிரமசாலியாக கம்பரால் உருவகிக்கப்படுகிறான். கும்பகர்ணனை, காலனார் உயிர் காலனாம் என்பார் கம்பர். இந்திரனையும் அவனது ஐராவதம் என்னும் யானையையும் பதம் பார்த்தவன் என்கிறார். அண்ணனுக்குத் தன்னை அர்ப்பணித்தவன்; அவனுக்கு அறம் எது என்று மந்திராலோசனை வழங்கியவன்; தனது சகோதரனின் பேச்சில் இருக்கும் வீரத்தையும், எண்ணத்தில் இருக்கும் தீயதையும் இடித்துரைத்தவன்; "செய்யும் போர் சரி என்று சொல்லவில்லை; அதில் கிட்டுவது வெற்றி என்றும் பகிரவில்லை; அதனால் நான் போர் புரிய மாட்டேன் எனச் சொல்லி விலகுவதுமில்லை" என்றுகூறி எல்லா நிலைகளிலும் கும்பகர்ணன் தனக்கேயான உயரிய மதிப்புகளை கொண்டவனாகவே வாழ்ந்தான். திகழ்ந்தான்; மடிந்தான். கம்பனின் கும்பகர்ணன் அறங்கள் நிறைந்த பெருந்தகையாளன் என்பது நன்கு புலனாகிறது.

**அடிக்குறிப்புகள்**

1. செல்லம் வே.தி., தமிழக வரலாறும் பண்பாடும் ப. 60
2. கும்பகர்ணன் வதை படலம் ப.62
3. கும்பகர்ணன் வதை படலம் ப.56
4. கும்பகர்ணன் வதை படலம் ப.66
5. https;//segarkavidhan.blogspot.com
6. கும்பகர்ணன் வதை படலம் ப.65
7. கும்பகர்ணன் வதை படலம் ப.70
8. கும்பகர்ணன் வதை படலம் ப.71
9. கும்பகர்ணன் வதை படலம் ப.179
10. கும்பகர்ணன் வதை படலம் ப.175
11. கும்பகர்ணன் வதை படலம் ப.125
12. கும்பகர்ணன் வதை படலம் ப.131

13. கும்பகர்ணன் வதை படலம் ப.258

**பயன்படுத்திய நூல்கள்**


1. செல்லம் வே.தி., தமிழக வரலாறும் பண்பாடும், மணிவாசகர் பதிப்பகம், 31, சிங்கர் தெரு, பிராட்வே, சென்னை - 600 108. பதிப்பு - ஜனவரி 2023.
2. தமிழறிஞர் சாமி, சிதம்பரனார், தமிழர் வாழ்வும் பண்பாடும், சாரதா பதிப்பகம், சென்னை - 600 014.
3. கம்பரின் கும்பகர்ணன் வதை படலம், டாக்டர் துரை. இராசாராம் தெளிவுரை, முல்லை நிலையம், 9, பாரதி நகர், முதல் தெரு, தி. நகர், சென்னை - 600 017.